# மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

| வ. எண். | ஆண்டு | அறிவிப்பு விவரம் |
|---|---|---|
| 1 | 2012-2013 | தமிழகத்தில் செயல்படும் தனியார் பள்ளிகளை துவக்க மற்றும் அங்கீகாரம் வழங்க தேவைவான குறைந்தபட்ச நிலம் வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் பல பள்ளிகள் இந்த நிபந்தனையை பூர்த்தி செய்யாததால் அங்கீகாரம் வழங்க இயலாத நிலை உள்ளது. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைக்கான விதிகள், 2011 நடைமுறைப்படுத்தப்படுவதால் அங்கீகாரம் இல்லாமல் பள்ளிகள் செயல்பட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, குறைந்தபட்ச நிலத்தினை தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் வாரியாகவும், மாணவர் எண்ணிக்கை மற்றும் வகுப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் நிர்ணயம் செய்யவல்லுநர் குழு அமைக்கப்படும். |
| 2 | 2015-2016 | மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தில் நிர்வாகப் பணிகள்செம்மையாக நடைபெற 6 பணியிடங்கள் பணிநிரவல் வாயிலாக நிரப்பப்படும். |
| 3 | 2016-2017 | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான 25% இடஒதுக்கீட்டின்படி, தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான கல்வி கட்டணத்தை ஈடு செய்திடும் பணிமெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு உதவிகணக்கு அலுவலர் பணியிடம், ஒருகண்காணிப்பாளர் பணியிடம், 2 உதவியாளர்கள் பணியிடங்கள், 2 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 2 தட்டச்சர் பணியிடங்கள் அளிக்கப்படும். அப்பணியிடங்கள் பணிநிரவல் மூலம் நிரப்பப்படும். |

| வ. எண். | ஆண்டு | அறிவிப்பு விவரம் |
|---|---|---|
| 4 | 2017-2018 | 1. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பணியிடைப் பயிற்சிகளைப் போன்று சுயநிதிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படும். |
| | | 2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் துவங்க அனுமதி, அங்கீகாரம் மற்றும் தொடர் அங்கீகாரம் பெறும் முறைகள் இணையவழி மூலம் நடைமுறைப்படுத்துவதோடு அதன் நடைமுறைகள் எளிமையாக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.10 இலட்சம்செலவிடப்படும். |
| | | 3. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நிர்வாக மேம்பாட்டினைச் சீர்படுத்துவதற்காக இரண்டு புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்கள் கிருஷ்ணகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் ரூ.32.85 இலட்சம் தொடர் செலவினம் என்ற அளவில் அனுமதிக்கப்படும். |